www.tamilarangam.net

தந்துதவியவர்: தேசம்நெற்

அன்பளிப்பு **U.K. 40p** Germany: 2.00DM, France: 5FF, Swiss: 2SF, Canada: 1.25Ca$

The EelaBhoomi

# ஈழபூமி

The Weekly Tamil Newspaper in Europe

ஆண்டு 1 வாரம் 2 30-10-91 புதன்கிழமை

ஈழபூமி வாசகர்களிடமிருந்து ஆக்கங்களை வரவேற்கிறது. ஆக்கங்கள் எந்த ஒரு தனி நபரையோ அல்லது குழுக்களையோ அல்லது அமைப்புக்களையோ பாதிக்காத வகையில் இருக்க வேண்டும். எமது பத்திரிகைக்கு விற்பனை பிரதிநிதிகள் ஐரோப்பா வில் சகல பகுதிகளிலும் தேவை.

# யாழ் குடாநாட்டில் 15 ஆயிரம் இராணுவத்தினர்

(யாழ் நிருபர்)

**யாழ். தீபகற்பத்தில் 15 ஆயிரம் இராணுவத்தினர் நிலை கொண்டிருப்பதாகவும் மேலும் பல இராணுவப்பிரிவுகள் குவிக்கப்படலாம் எனவும் கொழும்பில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.**

கைப்பற்றப்பட்ட அனலை தீவு, எழுவைதீவு, நெடுந்தீவு, நயினா தீவு, கச்சதீவு, பூநகரி போன்ற யாழ் நகரைச்சுற்றி உள்ள பகுதிகளிலேயே இவ்வாறு இராணுவத்தினர் குவிக்க ப்பட்டுள்ளனர். யாழ். குடா நாட்டின் கேந்திரப் பகுதிகளைச் சுற்றி வளைத்த பின்னரே யாழ். நகரைக் கைப்பற்ற இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமாகும்

7ம் பக்கம் பார்க்க

● இராணுவ நிலைகளும் நகர்வும்




## நொச்சி மோட்டையில் இராணுவத்தினர் குவிப்பு

(எம். எஸ். சலீம்)

வவுனியாவுக்கும் ஓமந்தைக்கும் இடையில் உள்ள கிராமமான நொச்சிமோட் டையில் இராணுவத்தினர் குவிக்கப்படுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் இருந்தும் ஒரு இராணுவப்

7ம் பக்கம் பார்க்க

## சங்குப்பிட்டித் துறையை இராணுவம் கைப்பற்றியது

(யாழ் நிருபர்)

பெரும் எதிர்ப்புக்கு மத்தியில் சங்குப்பிட்டித் துறையை இராணுவத்தினர் கைப்பற்றியதாக இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். இதன் மூலம் சங்குப்பிட்டி-கேரதீவு போக்குவரத்து முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. கடற்படை, விமானப்படை உதவியுடன் வட மேற்கு கரையில் செவ்வாயன்று இறங்கிய நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் நான்கு மைல் தூரம் முன்னேறி சங்குப்பிட்டித்துறையை கைப்பற்றியுள்ளனர்.

## பிரிட்டனில் ஆசியர்கள் நாஸிகளை எதிர்ப்பர்

-ஜெர்மனி அக். 27

ஜெர்மனியில் உள்ள நாஸி ஆதரவாளர்களுக்கும் பிரிட்டனில் உள்ள தீவிர வலதுசாரிகளுக்குமிடையே தொடர்புகள் ஏற்பட்டு வருவதாக ஜேர்மனியில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரிட்டிஷ் தீவிரவாதிகளும், ஜேர்மனிய நாஸிகளும் ஆஸ்திரிய தலைநகர் வீயென்னாவுக்கு அருகில் உள்ள காடுகளில் இராணுவப் பயிற்சி பெற்று வருவதாகவும். இவர்கள் ஜேர்மனியில் நான்காவது ரிச்சை அமைக்க விரும்பும் பெவெகங் குழுவினரால் பயிற்றப்படுவதாகவும் தெரிகிறது.

இந்தப் புதிய உறவு காரணமாக ஜெர்மன் பொலிஸாரும், பிரிட்டிஷ் பொலிசாரும் உஷாரடைந்துள்ளதுடன், ஐந்து பிரிட்டிஷ் தீவிரவாதிகளையும் ஜெர்மனியில் வைத்து கைது செய்துள்ளனர்.

பிரிட்டிஷ் தீவிரவாதிகள் மிகச் சிறிய தொகையினராக இருப்பதால் குடியேற்றக்காரார்களுக்கு பெரிய அளவில் அபாயம் இல்லை எனவும், பிரிட்டனில் உள்ள ஆசியர்கள் அவர்களை எதிர்க்கும் நிலையில் உள்ளனர் எனவும், பிரிட்டனின் 'இன்டிபென்டன்' பத்திரிகை கூறுகிறது.

ஜெர்மனி, பிரான்ஸ், கிழக்கு ஐரோப்பா ஆகிய நாடுகளில் வெளிநாட்டாருக்கு எதிரான உணர்வு தொடரும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## பண்ணைப் பாலம் தகர்ப்பு

(யாழ் நிருபர் ஆனந்த சங்கர்)

மண்டை தீவையும் - யாழ் நகரையும் இணைக்கும் பண்ணைப் பாலம் விடுதலைப் புலிகளினால் தகர்க்கப்பட்டுள்ளது. இதனால் இராணுவத்தினரின் முன்னேற்றம் தாமதமாகியுள்ளது.

சேதமாக்கப்பட்ட பண்ணைப்

4ம் பக்கம் பார்க்க

## தடங்கலின்றி இயங்கும் யாழ். வங்கிகள்!

(ஆனந்த சங்கர் அக். 27)

யாழ். குடாநாட்டில் உள்ள சுண்ணாகம், சாவகச்சேரி, பருத்தித்துறை, மானிப்பாய், நெல்லியடி இலங்கை வங்கிக்கிளைகள் எதுவித தடங்கலுமின்றி வரையறுக்கப்பட்ட நேரத்தில் இயங்குவதாக இலங்கை வங்கியின் நடவடிக்கை முகாமையாளர் கே. துரைராஜா தெரிவித்தார். அவர் மேலும், ஊர்காவத்துறை, காங்கேசன்துறை கிளைகளுக்காக யாழ்ப்பாணத்தில் உள்ள, ஸ்ரான்லி வீதி, பிரதான வீதி, கன்னாதிட்டி, நவீன சந்தை கிளைகள் இயங்குவதாகவும் கூறினார்.

உள்ளே

ஒப்பரேசன் வலம்புரி ஒரு கண்ணோட்டம் என்ற ஆய்வு 5ஆம் பக்கத்தில் இடம் பெறுகிறது.

அனைத்து செய்திகளையும் தாங்கிவரும் தனித்துவமான பத்திரிகையே ஈழபூமி

www.tamilarangam.net



# உலகச் செய்திகள்

## யூகோ இராணுவம் முன்னேறுகிறது.

யுகோசிலாவியா இராணுவம் டுயூபரவோனிக்கை நோக்கி முன்னேருகின்றது

மிகவும் பிரசித்தி வாய்ந்த பழமை நகரான டுயூபரவோனிக்கை யுகோசிலாவிய தேசிய இராணுவம் அண்மித்துள்ளது. இந் நகரின் பெரும் மதில்களில் இருந்து அரைமைல் தூரத்தில் நிலை கொண்டிருக்கும் இந்த இராணுவம் குரோசியர்களை சரணடையப் பணித்துள்ளது. குரோசியர்கள் சரணடையாவிடின் தாம் மீண்டும் பாரிய தாக்குதல்களை நடாத்தப் போவதாக அறிவித்துள்ளது.

இதனால் குரோசியர்களின் பழமை வாய்ந்த இந்நகரம் அழிந்து போகக் கூடும் என பலரும் அச்சம் தெரிவித்துள்ளனர்.

## இந்தியாவில் ஆயிரம் பேர் பலி



வட இந்தியாவில் கடந்த வாரம் இடம் பெற்ற கடுமையான பூமி அதிர்ச்சியில் ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இமய மலை அடிவாரத்தில் உள்ள உத்தர்காசி மாவட்டத்திலேயே பெரும் பாதிப்பை இது ஏற்படுத்தியுள்ளது. இப்பூமி அதிர்ச்சி பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள காஸ்மீர், நேபாளத்தின் தென் மேற்கு பகுதிகளிலும் காணப்பட்டது.

இது புதுடில்லியையும் சுமார் ஐம்பது செக்கன்கள் தாக்கிய போதிலும் சேதம் எதையும் ஏற்படுத்தவில்லை. சம்பவம் நடந்த இடத்தையும், பாதிக்கப்பட்டவர்களையும் இந்திய பிரதம மந்திரி திரு. நரசிம்மராவ் சென்று பார்வையிட்டார்.

இச்சம்பவத்திற்காக அனுதாபச் செய்தி ஒன்றை இலங்கை ஜனாதிபதி இந்தியப்பிரதம மந்திரிக்கு அனுப்பியதுடன், ஆயிரம் கிலோ தேயிலையையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

## புஷ் கோர்பச்சோவ் சந்திப்பு

திரு. புஷ்சும், கோபச்சேவும் கடந்த செவ்வாய்க்கிழமை ஸ்பாணியத் தலைநகரான மெட்றிட்டில் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தினார்கள்.

இவர்கள் மத்திய கிழக்கு சமாதான மகாநாடுக்கு முன்னோடியாகவே இச்சந்திப்பு மேற்கொண்டனர் சோவியத்தில் நடந்த கோபச்சேவ்வுக்கெதிரான சதிக்குப் பின் முதல் தடவையாக இருவரும் சந்தித்துள்ளனர்.

## எண்ணைக் கிணறுகள் தீ அணைப்பு

குவைட்டில் எரிந்து கொண்டிருக்கும் கடைசி எண்ணைக் கிணறும் விரைவில் அணைந்து விடும்.

வளைகுடா சண்டையில் குவைத்திலுள்ள 732 எண்ணைக் கிணறுகளில் 18 எண்ணைக்கிணறுகள் ஈராக்கினால் சேதப்படுத்தப்பட்டது தெரிந்ததே. இவற்றுள் 17 ஏற்கனவே சீர் செய்யப்பட்டுள்ளது. கடைசிக் கிணறும் ஒரு மாபெரும் சடங்குடன் அணைத்து வைக்கப்படும். இச் சடங்கு பேர்கன் என்னும் இடத்தில் நவம்பர் 5ந் திகதி நடைபெறவுள்ளது இத்தினம் குவைத்தில் தேசிய தினமாக கொண்டாடப்படவுள்ளது.

## பாக் இந்திய கிரிக்கெட் இடைநிறுத்தம்

சிவசேனையின் அச்சுறுத்தலைத் தொடர்ந்து, இந்திய பாகிஸ்தான் கிரிகெட் ஆட்டம் கைவிடப்பட்டது. கடந்த 28-ஆம் திகதி நடைபெறவேண்டிய முதலாவது ஆட்டம், விளையாட்டுத் திடலில் குழிகளைத்தோண்டி, ஸ்டேடியத்தை எரிக்கப் போவதாக பயமுறுத்தியதனால் இடைநிறுத்தப்பட்டது. இந்து தீவிரவாதிகளான சிவசேனை இயக்கத்தவர்கள், பாகிஸ்தான் கோஸ்டி இங்கு விளையாட நாம் அனுமதிக்க மாட்டோம் எனவும், இந்தியாவில் பயங்கரவாதத்தை பரப்பிவரும் பாகிஸ்தானுக்கு ஒரு பாடம் படித்துக்கொடுக்க இது அவசியம் என்றும் அவர்கள் கூறியுள்ளார்கள்.


காஸ்மீர் தீவிரவாதிகளுக்கு உதவி செய்துவருவதாக இந்தியா குற்றம் சாட்டிவருவதும், இதனை பாகிஸ்தான் மறுத்துவருவதும் தெரிந்ததே.

## 13 வருடகால கம்போடிய யுத்தம் முடிவு?

பதின்மூன்று ஆண்டுகாலமாக கம்போடியாவில் நடைபெற்றுவரும் சிவில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரும் நோக்கில் ஐக்கிய நாடுகள் சபை ஆதரவிலான சமாதான ஒப்பந்தத்தில் 19 நாடுகள் கைச்சாத்திட்டன. 1979-ஆம் ஆண்டில் வியட்நாம் ஆதரவில் பதவியேற்ற அரசாங்கம் அங்கு கொமரேச் உட்பட்ட மூன்று தீவிரவாத குழுக்களுக்கெதிராக போராடி வருகின்றது. 1975 முதல் 78 வரை கம்போடியாவை ஆட்சி செய்த கொமரேச் பத்து இலட்சம் மக்களின் படு கொலைக்கு காரணமாக இருந்தது என குற்றம் சாட்டி வருகின்றனர்.

இருப்பினும் கம்போடிய உயர் தேசிய சபையில் கொமரோச் பிரதிநிதிகளும் ஆட்சி செய்வதற்கு இவ் ஒப்பந்தம் வழி செய்துள்ளது. 1993-ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் மேற்பார்வையில் தேர்தல் நடைபெறும்வரை இச் சபை அதிகாரத்தில் இருக்கும்.


## வி.பி.சிங் கைது



இந்தியாவின் முன்னைநாள் பிரதமர் வீ.பீ சிங் நேற்று அயோத்தியில் ஊர்வலம் ஒன்றை நடாத்தும் போது கைது செய்யப்பட்டார்.


அயோத்தியில் சர்ச்சைக்குரிய முஸ்லீம் பள்ளிவாசலுக்கு ஊர்வலம் ஒன்றை முன்னெடுத்துச் சென்றதை காரணம் காட்டியே இவர் கைதுசெய்யப்பட்டதாகவும் இன்னும் சில தினங்களில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்த இருந்தார் எனவும் இந்திய செய்தி நிறுவனம் டாஸ் அறிவித்துள்ளது. அயோத்தியில் உள்ள பள்ளிவாசலை இடித்து இந்துக் கோவில் கட்ட வேண்டும் என இந்த முன்னணி போராட்டம் நடாத்தி வருவதும் தெரிந்ததே.

இந்த இந்து முஸ்லிம் போராட்டத்தினால் 800 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதுவும் வி.பி. சிங்கின் அரசியல் தோல்விக்கு காரணமாகும்.



உலகச்செய்திகள் தொகுப்பு

தயா மாறன்



## கொழும்பில் புலிகளைத்தேடி வேட்டை.

கொழும்பில் இரு புலிகளைத் தேடி வேட்டை

கூட்டுப்படைத் தலைமை அலுவலக குண்டு வெடிப்பு, ரஞ்சன் விஜேரத்தின கொலை சம்பந்தமாக தேடப்பட்டுவரும் சந்தேக நபர்களும் விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படைப் பிரிவு உறுப்பினர்களுமான, சாவகச்சேரியைச் சேர்ந்த கார்த்திக், தின்னைவேலியைச் சேர்ந்த ரவி என்றழைக்கப்படும் வைத்திலிங்கம் திருக்கேதீஸ்வரனும் கொழும்பில் நடமாடுவதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது.

இவர்கள் வத்தளைப்பகுதியிலும், கல்கிசைப் பகுதியிலும் காணப்பட்டதாகவும், இவர்களைக் கைது செய்ய விசேட பொலிஸ் படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் சாம் தம்பிமுத்து கொலை வழக்கு சம்பந்தமாக தேடப்பட்டு வரும் மட்டக்களப்பு ஆரியம்பதியைச் சேர்ந்த சோமநாதனும் அண்மையில் கல்கிசைப் பகுதியில் காணப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்

## இலங்கை இராணுவத்தின் தாராள மனப்பாங்கு

இலங்கை இராணுவத்தினர் காங்கேசன் துறை உணவுக்களஞ்சியத்தில் நீண்டகாலமாக வைக்கப்பட்டிருந்த 500 தொன் உணவுப்பொருட்களை, புங்குடு தீவு, மற்றும் தமது கட்டுப்பாட்டில் உள்ள இடங்களில் தஞ்சமடைந்திருக்கும் மக்களுக்கு விநியோகித்து வருவதாக புனர்வாழ்வு அமைச்சு தெரிவித்தது. ஐநூறு குடும்பங்களைச் சேர்ந்த இரண்டாயிரம் பேரைத்தவிர ஏனையோர் வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளதாக மேலும் தெரிவித்தது.

பூநகரி மோதலில் காயமடைந்து பலாலிக்கு எடுத்துச் செல்லப் [illegible] மரணமான [illegible] வாசி ஆஸ்பத்திரியில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளது.

சுற்றி வளைப்பு

இதேவேளை கடந்த புதன் கிழமை வவுனியா சாந்தசோலை பகுதியைச் சுற்றி வளைத்த இராணுவத்தினர் வேறு இடங்களில் இருந்து வந்து தங்கியிருந்த 200 பேரை கைது செய்து வவுனியா நகருக்கு அழைத்துச் சென்றனர். இவர்கள் முகமூடி இளைஞர் முன்னிலையில் வைத்து அடையாளம் காணப்பட்டதாகவும் 22 பேர் மட்டுமே தடுத்து வைக்கப்பட்டதாகவும் மேலும் சிலர் அடுத்த கட்ட விசாரணையில் விடுவிக்கப்பட்டதாவும் தெரியவரு

SAMRAS
Video & Spices

We Specialised in Old & New Tamil, Hindi & Malayalam Films

VISIT US FOR HIRE AND SALE
AT BEST PRICE IN TOWN

Tamil, Hindi & Malayalam Film Sound Track,
Devotional & Classical Audio, Compact Disk & Records
Sri Lankan & Indian Groceries Retail & Wholesales
Temple Abishekam Ingredients also available from us.
Latest daily, Weekly, Monthly, Tamil Magazines.

251A - 251B, Haydons Road
London SW19 8TX, U.K
Phone: 081-544 1686 Fax: 081-544 1745

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



The Eela Bhoomi

ஈழபூமி

The Weekly Tamil Newspaper in Europe

ஆண்டு 1 வாரம் 2 30-10-91 புதன்கிழமை

## ஈழபூமியின் ஏட்டில் இருந்து

### ஈழ மக்களின் வெளியேற்றமும் அருகிவரும் தமிழ் மொழியும்

தமிழீழ போராட்டத்தின் வளர்ச்சியின் காரணமாக ஏற்பட்ட சமூக, அரசியல், பொருளாதார மாற்றங்கள் தமிழீழத்தில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களை வேறு இடங்களுக்கோ அன்றி நாடுகளுக்கோ ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்களின் நிமித்தம் வெளியேற வைத்து விட்டது.

ஸ்ரீலங்கா இராணுவத்தின் கெடுபிடி, சக போராளி இயக்கங்களுக்கிடையே ஏற்பட்ட முரண்பாடுகள், அச்சுறுத்தல்கள் இவற்றுள் முக்கிய காரணிகள் இதன் காரணமாக பெருந்தொகையான மக்கள் இந்தியாவில் தமிழ் நாட்டுக்கு அகதிகளாய்ச் சென்றிருந்தாலும் அதே அளவிலான மக்கள் மேலைத்தேய நாடுகளுக்கு இடம் பெயர்ந்தமை இங்கு நோக்கத்தக்கது.

ஜேர்மனி, பிரான்ஸ், சுவிற்சர்லாந்து, சுவீடன், இங்கிலாந்து, கனடா ஆகிய இந்த ஆறு முக்கிய நாடுகளில் சுமார் ஒன்றரை இலட்சம் பேர் வரை அகதிகளாய் வந்திருக்கும் இவ் வேளையில் இங்கு பிறந்து வரும் குழந்தைகளின் வாழ்க்கை முறையும் கூடவே மொழியும் மாறி வருவது கூர்ந்து கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

மொழி என்பது ஒருவன் தனது எண்ணங்களை வெளிப்படுத்த பயன்படும் ஊடகம் என்றாலும், சொந்த மொழியை மறப்பதோ, புறக்கணிப்பதோ அந்த சமூகத்தின் வளர்ச்சியை பாதிக்கின்றது. ஜேர்மனியில் டொச்சும், பிரான்ஸில் பிரெஞ்சும், லண்டனில் ஆங்கிலமும் மட்டுமே பழகிக் கொள்ளும் சிறுவர்கள் நாளைய தீர்வின் பிரகாரம் நாடு செல்ல நேரிடும் சமயம் சொந்த மொழியில் பேசும் திறன் அற்றவர்களாகவும், ஏனைய தமிழீழ சமூகத்தவருடன் தொடர்பு கொள்ள முடியாதவர்களாகவும் மாறிவிடுவார்கள்.

எனவே தமிழ் மொழியானது அருகிச் செல்லாது சிறுவர்கள் கற்கும் வகையில் வழிமுறைகளை அமைத்துக் கொள்ள வேண்டியது பெற்றோரின் கடமையாகும். எப்போதுமே அந்நிய மொழியில் காதலும் தாய் மொழியில் அலட்சியமும் காட்டும் எம் சமூகம் நாளைய பிரச்சினையை இன்றே அறிந்து கொள்ளுதல் அவசியமாகும்.

தமிழீழம் என்னும் நாடு மலரும் போது மேலும் பல மொழிகள் தேசிய மொழிகளாக வரவேண்டிய சூழ் நிலையைத் தடுத்து இனிமேலாவது தமிழ் மொழியைக் கற்றுக் கொள்ள வாய்ப்பளிப்பது பெற்றோர் ஒவ்வொருவருடைய கடமை என்பது சிந்திக்கப்படவேண்டும்.

தொடர்புகளுக்கு.........
**The Eela Bhoomi,**
**164A (Rear) Mitcham Road,**
**London SW17**

# கல் ஆனாலும் கணவன் புல் ஆனாலும் புருஷன்

ஆதிப் பொதுவுடமைச் சமுதாயம் என்று நாம் கேள்விப்பட்ட ஒன்றைத் தவிர மற்றைய எல்லா சமுதாய அமைப்புக்களிலும் பெண்களுக்கு என்று சில விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

பெற்றெடுக்கின்ற தாயிலிருந்து கட்டிக்கொடுக்கின்ற கன்னிவரையிலே செய்ய வேண்டிய கடமைகளை சாஸ்திரங்களும் சடங்குகளும் போட்டி போட்டுக் கூறியிருக்கின்றன. 20ம் நூற்றாண்டின் காலப்பகுதியிலே வாழுகின்ற நாம் இது பற்றி சிந்திக்க வேண்டிய கடப்பாடு உடையவர்களாக இருக்கின்றோம். கலை, இலக்கியம், நடைமுறை எதுவாக இருந்தாலும் அங்கே பெண்ணிற்கென்று சில விதிமுறைகள் விதிக்கப்பட்டிருக்கின்றது.

சமத்துவம் சமத்துவம் என்று தொண்டை கிழியப் பேசுபவர்கள் பெண்டாட்டியை ஏறி மிதிப்பதும் கண்ணே கலைமானே என்றவர்கள் கட்டிய மறுநாளே காறி உமிழ்வதும் எந்தச் சமுதாயத்தில் இல்லாவிட்டாலும் கூட எமது ஈழச்சமுதாயத்தில் முன்னோக்கி நிற்கும் பண்புகள். இதனாலேயே பெண்ணடிமை என்ற பதமும் பெண்விடுதலை என்ற சொல்லும் எந்தளவுக்கு எமது மக்களால் விளங்கிக் கொள்ளப் பட்டுள்ளது என்பதை ஆராயும் பொருட்டே இக்கட்டுரையை தொடர்கிறேன். இது தொடர்பான உங்கள் கருத்துக்களை முழுமனத்துடன் ஈழபூமிக்கு அனுப்பி வைத்தால் வரவேற்கத் தக்கதாய் இருக்கும்.

பெண்ணடிமை என்றால் என்ன?

பெண்ணடிமை என்றால் என்ன என்ற தமிழீழத்தில் உள்ள ஆண்களிடம் சரி பெண்களிடம் சரி வினாவுவோமாயின், பிள்ளையைத் தூக்காதது, சமையல் பண்ணாதது என்று ஒரே விளக்கங்கள் இருசாரிடமும் இருந்து வரும் என்பது வெள்ளிடைமலை.

உண்மையிலே பெண்ணடிமை என்பதை நாம் எப்படி ஆராய்கிறோம்? இந்தக் கேள்விக்குரிய விடையை போராடிய பல ஸ்தாபனங்கள் மக்கள் மத்தியிலே விளக்கத் தவறிவிட்டன. ஒரு சமுதாயத்தில் ஒரு வர்க்கம் (ஆண் வர்க்கம்) இன்னோரு வர்க்கத்தை அதாவது பெண் வர்கத்தை அரசாளும் தன்மையே பெண்ணடிமையின் ஆதார அம்சம் இதனை சற்று விளக்கமாக பார்க்க வேண்டியது அவசியம். ஆண்வர்க்கம் பெண்வர்க்கத்தின் மீது தனது பலத்தை பிரயோகித்து, சமுதாய, சமய, மற்றும் அன்றாட வாழ்க்கை நடவடிக்கையில் தாமே தனித்து முடிவு எடுக்கும் அதிகாரப் போக்கும் அம் முடிவுகளை பெண்கள் மீது கட்டாயப்படுத்தி திணிக்கும் சர்வாதிகாரப் போக்குமே மேற் சொல்லப்பட்ட விளக்கமாகும்.

பொதுவாக ஈழத்துப் பெண் சமுதாயத்தை அவர்களின் வாழ்க்கை முறையில் ஏற்கும் தனங்களைப் பற்றி ஆராய்வதன் மூலம் இதனை நாம் அறிந்து கொள்ளலாம். ஆண் உழைப்தற்கும் பெண் சமைப்பதற்கும் என்றும், ஆண் குடும்பத் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கும் பெண் குனிந்து நடப்பதற்கும் என்றும் வழங்கி வரும் ஒரு வித வேதம் காலப்போக்கில் சில மாற்றங்களைக் காண்பித்திருந்தாலும்

அப்படியே சங்க கால சிந்தனையிலேயே இருப்பது கண்கூடு.

பெண்வழிச் சமுதாயத்திலிருந்து மனிதனுடைய வளர்ச்சி ஆண்வழி சமுதாயமாக உருப்பட்ட போது அடிமையாக்கப்பட்ட பெண்ணினம் சில வரம்பு முறைகளை மீறுவது தவிர்க்கப்பட்டிருந்தது. இவற்றை நான் தனித்தனியாக நோக்கப்படுவது சிறந்தது.


இலக்கியங்கள்:

கல்லாலால் ஆனாலும் கணவன் புல்லால் ஆனாலும் புருஷன் என்று கணவன் காடையன் என்றாலும் உனக்கு கட்டிலும் அடுக்களையும் தான் சொந்தம் என்பதை பிரதிபலிக்கின்றது. பெண்புத்தி பின் புத்தி, கற்புள்ள பெண் என்றால் பெய்யெனப் பெய்யும் மழை என்றெல்லாம் எழுதுகின்ற இலக்கியங்கள் எல்லாமே பெண்களின் நடத்தைகளுக்கும் வாழ்க்கைக்கும் சட்ட விதிகளை அமைத்தது அடிமைத்தனத்தின் ஒரு அத்தியாயமே.

டன. கணவனே கண்கண்ட தெய்வம் என்று ஒரு முதுமொழி உண்டு. எட்டு மணி நேரம் அலுவலகத்திலும், எட்டு மணி நேரம் விட்டு வேலையிலும் சுமார் 16 மணி நேரம் மாடாய் உழைப்பவர்களுக்கு, பின் கட்டிலிலே வேலை. ஆக எட்டு மணி நேரம் .வேலை செய்து விட்டு வரும் கணவன் கண் கண்ட தெய்வம் என்றால்

**எஸ். ராசையா**

ஏன் ஒரு' இடத்தில் கூட (பாரதியைத் தவிர) மனைவியே மண்கண்ட தெய்வம் என்று கூறப்படவில்லை இது மட்டுமல்ல திருமணம் என்று பேச்சு எடுத்தாலே சீதனம் என்று மூச்சு விடும் ஆண்கள் மத்தியிலே இன்று ஆயிரம் ஆயிரம் பெண்களின் வாழ்க்கை சீரணிக்கப் பட்டிருக்கின்றதே இதற்கு அடிப்படையில் வேறு எது காரணியாக



சமயங்கள்:

சமயங்கள் கூட பெண்களுக்கு என்று சில கட்டுப்பாடுகளை விதித்தது. அம்மன் கோவிலில் கூட ஆண்தான் பூசாரி என்கிற நிலையிலே இருப்பது மறைமுகமாக பெண்களுக்கு சமுதாயத்தில் வழங்கப்பட்ட அந்தஸ்தையே பிரதிபலிக்கின்றது. அது மட்டுமல்ல இஸ்லாம் மத விதி ஒன்றை எடுத்துப் பாருங்கள் ஆண் ஏழு பெண்களை மணக்கலாம். பெண் முக்காடு போட்ட தலை நிமிரக் கூடாது என்கிறது. இவை ஒரு கடவுளினால் மனிதனுக்கு போதிக்கப்பட்ட மந்திரங்களா இல்லை மனிதன் மனைவிக்குப் போட்ட சட்டதிட்டங்களா? ஒரு கடவுள் ஆணுக்கு மட்டும் எப்படி சாதகமாக தீர்ப்பு எழுதியிருப்பான்? இங்கே கூட அடிப்படையில் இருப்பது பெண்ணடிமையின் ஒரு சாராம்சமே!

சமுதாயமும் சடங்குகளும்:

எமது சமூக விதியும் சடங்குகளும் கூட என்ன சொல்லின. குமர்ப்பிள்ளை வீட்டை விட்டு வெளியிலை போகக் கூடாது. கட்டியவன் குடிகாரனாய் இருந்தாலும் வீட்டை விட்டு வெளியிலை வெளியேறக்கூடாது. கன்னியாக இருக்கும் போது தந்தையும் மனைவியாகிப் போன போது கணவனும் அங்கே தெய்வங்களாகவே சிருஷ்டிக்கப்ப

இருக்க முடியும்? இது கூட ஒரு அடிமையின் அடிச்சுவடே!

இதனால் தான் பெண் என்பது பெண்ணினம் தாம் சுயமாக முடிவு செய்யும் உரிமையிலிருந்து புரிந்து கொள்ளப்படல் வேண்டும். எனவே என் கணவன் தொட்டிலை ஆட்டுகிறார். சில வேளை முட்டை கூடப் பொரித்துத் தருகின்றார். என்று கூறி விட்டு பெண்ணடிமைக்கே எமது வீட்டில் இடமில்லை என்று கூறும் பெண்களும், என் மனைவிக்கு நான் காய்கறி வெட்டிக் கொடுக்கிறேன் எனவே எங்கள் வீட்டில் ஆண் அதிகாரம் என்பதற்கே இடமில்லை என்கின்ற ஆண்களும் அடிப்படைப் பிரச்சனையை உணர்ந்து கொள்ளவேண்டியவர்கள். ஒரு தனி மனிதனோ, குடும்பமோ மாறுவதானாலும் மாற்றப்படுவதனாலும் ஒரு அடிமைச் சமுதாயம் விடிவு கண்டு விடப் போவதில்லை இது ஒரு நுளம்பை அடித்துக் கொன்று விட்டு மலேரியா நோயை அழித்து விட்டேன் என்று மார்தட்டுவதற்கு ஒப்பாகும்.

இதற்கு பரிகாரம் இல்லையா?

ஏன் இல்லை அடிமைப் பிரச்சினையை கண்டு பிடிக்க வேண்டும் அதாவது மலேரியாவுக்கு காரணி அனோபிலிஸ் நுளம்பு என்று ஆதார பூர்வமாக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஈழபூமி விளம்பரப் பகுதி

### மணமகன்

30 வயது நிரம்பிய சைவ வேளாளர் குல பயிற்றப்பட்ட ஆசிரியைக்கு சகோதரர்கள் மணமகன் தேடுகிறார்கள். தகுந்த சீதனம் கொடுக்கப்படும். வி.இ.ஆ10

26 வயதுடைய துபாயில் கணக்கியலாளராயிருக்கும் நங்கைக்கு படித்த மணமகன் தேவை. வி.இ.ஆ11

32 வயது நிரம்பிய லண்டனில் இருக்கும் மணமகளி ற்கு படித்த மணமகன் தேவை. தகுந்த சீதனம் கொடுக்கப்படும். வி.இ.ஆ12

26 வயது நிரம்பிய செவ்வாய்க் குற்றமுள்ள சைவ வேளாளர் குல மணமகளிற்கு மணமகன் தேவை. வி.இ.ஆ13

### மணமகள்

28 வயது நிரம்பிய சிவில் இஞ்சினியராக கடமை பார்க்கும் மணமகனிற்கு அழகிய மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கவில்லை. வி.இ.பெ45

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 32 வயது மணமகன் சைவ மணமகளைத் தேடுகிறார். வி.இ.பெ46

### விற்பனைக்கு

சிவப்பு நிற ீ இலக்க **Blue Bird 2.0** கார் குறைந்த மைலேஜ். வி.இ.வி14

சில்வர் நிற ரீ இலக்க **Dutsun** கார் நல்ல நிலையில் **M.O.T & Tax** உடன் விற்பனைக்குண்டு. வி.இ.வி15

### தேவை

தமிழ் தட்டச்சு இயந்திரம் நல்ல நிலையில் தேவை. வி.இ.தே.160

இரண்டு படுக்கை அறை உள்ள, இலண்டன் ரூட்டிங் பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை. வி.இ.தே180

**Mitcham** பகுதியில் இருவர் தங்கக்கூடிய அறை சமைக்கும் வசதியுடன் தேவை. வி.இ.தே200

## பண்ணைப் பாலம்......

1ம் பக்கத் தொடர்ச்சி

பாலத்தை திருத்தும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளதாகவும், பாலம் திருத்தப்பட்டதும் படையினர் முன்னேறுவர் என்றும் கொழும்பு கூட்டுப் படையின் தலைமை அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க பண்ணைப் பாலத்துக்கு அருகிலுள்ள கொட்டடிப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் அரண்களை அழிக்கு முகமாக அப்பகுதியில் விமான மூலம் குண்டுகள் வீசப்பட்டதாயும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# உலகத்தைச் சுற்றி

# நீயா... நானா

உலகின் மிகப் பெரிய வல்லரசுகள் இரண்டிற்கிடையே ஏற் பட்ட போட்டிகள் உலகின் சமாதானத்தையும் அமைதியையும் அண்மைக்காலத்தில் குலைப்பதாகவும் அச்சுறுத்துவதாகவுமே அமைந்தது.

ஆனால் அண்மைக் காலத்தில் ஏற்பட்டிருக்கும் அமெரிக்க, ரஷ்ய போட்டிகள் உலக அமைதியை மீட்டுத் தருவதாக அமைவதை கண்கொண்டு பார்க்கக் கூடியதாய் உள்ளது. எத்தனையோ முயற்சிகளுக்கு மத்தியில் இரு நாடுகளும் உடன்படிக்கைக்கு வந்தது பாராட்டப் படவேண்டிய விடயமே. இந்த வகையில் உலக கவனத்தை ஈர்ந்தது அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஸ் விடுத்த அறிக்கை.




புதிய மாற்றங்களை நோக்கி நிற்கும் மிகையில் கோபர்சோவ்

அணுஆயுதக் குறைப்பும் இரத ஆயுத அழிப்பும் பற்றி அண்மையில் அமெரிக்க ஜனாதிபதி விடுத்த செய்தி யாவரும் அறிந்த விடயமே! அதற்கு பதிலடி கொடுப்பது போல நீயா? இல்லை நானா? என்று கேட்பது மாதிரி அறிக்கை ஒன்றை விடுத்திருக்கிறார் சோவியத் ஜனாதிபதி மிகையில் கோபர்சோவ் .

உலக சமாதானத்திற்கு அச்சுறுத்தலாக இருந்த இரண்டு வல்லரசுகள், உத்தரவாதமாக மாறி வரும் இவ்வேளையில் மேலதிக ஆயுதக் குறைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று உலக நாடுகள் கருத்து தெரிவிக்கின்றன.

ஆயுதக் குறைப்பு தொடர்பாக கோபர்சோவ் விடுத்த அறிக்கை எவருக்கும் ஆச்சரியத்தைக் கொடுக்காது விட்டாலும் அதாவது, எல்லோரும் எதிர்பார்த்ததே என்றாலும் பெருமளவில் குறைப்பு நடைபெறும் என்று எவருமே எதிர்பார்க்கவில்லை.



பாகங்களாக பிரித்து வைக்கப்பட்டிருக்கும் B-16 அணுக்குண்டு

அணுவாயுதம் அற்ற உலகை கட்டியெழுப்புவதில் முன்னிற்கும் இவ்விரு நாடுகளின் வழியை முன்மாதிரியாக பின்பற்றி ஏனைய ஆயுத உற்பத்தி செய்யும் நாடுகள் முன்வருமாயின் அணுவாயுதம் அற்ற உலகை நாம் இன்னும் ஒரு சகாப்தத்தில் கண்டு விடலாம்.

உலக கவனத்தை ஈர்த்த இரு நாடுகளின் அறிக்கைகள் வருமாறு.

### அமெரிக்க ஆலோசனை

<u>1) ஸ்ராட்டெஜிக் (Strategic) அணுஆயுதங்கள்</u>

**B1, B52** குண்டு தாங்கிகள் விடுதிக்கு வரவழைக்கப்படும்.

450 **Minutesman II** ஏவுகணைகள் தயார் நிலையில் இருந்து நிறுத்தப்படும் (பின்னர் அழிக்கப்படும்)

பீஸ்கீப்பர் **ICBC** ஏவுகணை முறை அழிக்கப்படும்.

**Midgetman** சிறிய **ICBM** நடமாடும் (ரகங்கள்) அழிக்கப்படும்.

குறுந்தூர தாக்கும் ஏவுகணைகள், குண்டு தாங்கி விமானங்கள் அழிக்கப்படும்.

> கடந்த பனிப்போர் காலப்பகுதிகளில் அமெரிக்கா உற்பத்தி செய்த ஆயுதங்களை தற்பொழுது பாவிக்கவும் மடியாமல் சேகரித்து வைக்கவும் வழியின்றி தவிக்கிறது.

<u>2) நீர் மூலம் ஏவும் தியேட்டர் அணுஆயுதங்கள்</u>

1300 செல்கள் அழிக்கப்படும்

850 **Launch** ஏவுகணைகள் அழிக்கப்படும்

<u>3) கடல்சார்ந்த அணு ஆயுதங்கள்</u>

அண்ணளவாக 2150 ஆயுதங்கள் திருப்பி அழைக்கப்பட்டு விடுதிகளில் வைக்கப்படும்.

இவற்றுள் அரைவாசி காலப் போக்கில் அழிக்கப்படும்.

ஆழதாக்கும் அணு ஆயுதக் குண்டுகள் பிரித்து எடுக்கப்படும்.

### ரஷ்யாவின் அலோசனை

<u>1) தந்திர அணு ஆயுதங்கள்</u>

போர் முனைஆயுதங்கள் 9000 குறைக்கப்படும்.

மேலும் இது போன்ற ஆயுதங்களில் அரைவாசி குறைக்

சோவியத் யூனியன் முழு அணுவாயுத பரிசோதனையை ஒரு வருடத்திற்கு நிறுத்தும்.

**ICBM** பல் போர்முனை நடமாடும் அணு ஆயுதங்கள் உடனடியாக நிறுத்தப்படும்.

தயார் நிலையிலிருக்கும் பெரியரக குண்டுவீச்சு விமானங்கள் அகற்றப்பட்டு விடுதிக்கு திருப்பப்படும்.

சிறிய நடமாடும் **ICBM** ஏவுகணைகளின் வேலைத்திட்டங்கள் நிறுத்தப்படும் ரெயில் சார்ந்த **ICBM** புதிய ஏவுகணைகள் தயாரித்தல் அல்லது அபிவிருத்தி செய்தல் நிறுத்தப்பட்டு இருக்கும் ஆயுதங்கள் விடுதிக்கு வரவழைக்கப்படும்.

<u>2) நிலம் மூலம் ஏவும் தியேட்டர் அணு ஆயுதங்கள்.</u>

சகல அணு ஆயுத ஆட்லறியும் இதர பாகங்களும் அத்தோடு சேர்ந்த அணு ஆயுத போர்முனைகளும் அழிக்கப்படும்



கிழக்குடன் கைகோர்க்கத் துடிக்கும் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்

<u>3) கடல் சார்ந்த அணு ஆயுதங்கள்.</u>

இரு பக்க உடன்படிக்கையின் கீழ் கடல் சார்ந்த அணு ஆயுதங்கள் நிறுத்தப்படும்.

கப்பல் தளங்களிலிருந்தும் பல் போக்கு நீர்மூழ்கிக் கப்பல்களிருந்தும் சகல **Tactical** அணு ஆயுதங்கள் திருப்பி அழைக்கப்படும். சில பின்னர் அழிக்கப்படும்

## நாரதர் சொல்கிறர்!

- லண்டனில் உள்ள ஒரு கோயிலில் நடந்த நிர்வாக உறுப்பாளர் தேர்தலின் போது பதவிக்காக பலர் மோதினார்களாம். ஆனால் இடையில் இருந்த அப்பாவி ஒருவர் அப்பதவிக்கு தெரிவாகி விட்டாராம்.
- வெள்ளிக்கிழமை தோறும் விம்பிள்டன் பிள்ளையார் கோவிலுக்குப் போகும் அந்த தென் லண்டனில் வசிக்கும் இயக்கப் பிரமுகர், யாரையாவது மடக்குவதானால் கோவில் தான் ஒரே வழி என்று கூறினாராம்.
- இங்கிருக்கும் ஒரு இயக்கப் பிரமுகர் பதுக்கி வைத்திருந்த காசில் வாங்கிய கடையை விற்று விட்டு திரும்ப அதனை குத்தகைக்கு எடுத்து நடத்துகிறாராம். இவர் சம்பளம் வாங்குவதற்காக மட்டும் பாராளுமன்றம் செல்கிறாராம்.
- இப்போது எமது மக்களுக்கு 'கலை' ரசனை குறைந்து வருவதாக லண்டனில் அண்மையில் நடந்த கவர்ச்சி நடிகைகளின் 'கலை' நிகழ்ச்சி ஒன்றில், அந்நிகழ்ச்சிக்கு முதலிட்ட பணத்தை இழந்த அமைப்பாளர் ஒருவர் கருத்துத் தெரிவித்தாராம்.
- புளட் இயக்கத்தில் இருந்த, பெண்களை பம்பாயில் கொண்டு சென்று விபச்சார விடுதிகளில் விற்ற அந்த இளைஞர் அகதியாக இங்கிலாந்து வந்துள்ளாராம். அவருக்கு ஒரு நாளாவது இருட்டடி கொடுக்க வேண்டும் என்று பாதிக்கப் பட்ட இன்னொரு இளைஞர் பேசிக் கொண்டாராம்.
- கவர்ச்சியின் ஆட்டத்தை ரசிக்க வந்த தமிழ் இளைஞர்கள், இறுதியில் அந்தக் கவர்ச்சியை பேரம் பேசினார்களாம். இந்தப் பேரம் வாய்ப் பேச்சில் தொடங்கி அடி பிடியில் முடிந்ததாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பிரேமாவும் சூனியக்காரர்களும்

மனிதனுடைய வாழ்க்கையில் தான் எத்தனை மாற்றங்கள். நேற்று பதவியில் இருந்தவர்கள்



பிரேமாவை மிரட்டும் லலித்

இன்று சிறையில்... இன்று சிறையில் இருப்பவர்கள் நாளை...

முதல் பிரதம மந்திரி என்னும் பெயரைத் தட்டிக் கொண்டவர். தேசிய பொருளாதாரத்தில் நம்பிக்கையும் பிரதம மந்திரியுடன் கூடிய அமைச்சரவைக்கே அதிகாரம் இருக்க வேண்டும் என்ற எண்ணமும் கொண்ட இவர் சர்வ அதிகாரம் உள்ள ஜனாதிபதி நிர்வாகத்தை குலைக்க முற்படும் அரசியல் பிரமுகர்களில் முன்னணிப் புள்ளி.

தன் போக்கிலே தன்னம்பிக்கையும், பிரேமதாசாவின் ஆட்சியை அழித்துவிட முடியும் என்ற அசையா வலுவும் கொண்டு செயற்படும் இவர் சொல்கிறார்....

ஜனாதிபதி பயமுறுத்துகிறார். கையெழுத்துப் போட்ட எம்.பிக்களுக்கு லஞ்சம் கொடுக்க முனைகிறார். தயவு செய்து லலித்துடன் சேரவேண்டாம். நான் உனக்கு வீடு தருகிறேன். சம்பளம் கூட்டித் தருகிறேன். உன் தொகுதிகளில் உள்ளவர்களுக்கு கூடிய வேலைவாய்ப்புத் தருகி

வத்திலிருந்த 15, 16 வயதுப் பையன்களையல்லவா? அவர்கள் யார்? அவர்கள் எங்கள் பிள்ளைகள் தானே?

புலிகளுக்கு ஆயுதம் கொடுத்தது தொடர்பான நம்பிக்கையில்லாப் பிரேரணை பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள் என்று வினவும் போது கூறுகிறார்:

இது முற்று முழுதாக சபாநாயகர் கையில் தான் இருக்கிறது. எம்.பி க்கள் உள்ளே (பாராளுமன்றத்தினுள்) போகப் பயப்படுகிறார்கள். ஏனென்றால் புலிகள் பாராளுமன்றம் வருகிறார்கள் அல்லவா?

புலிகளா? ஈரோஸ் அல்லவா வருகிறார்கள் என்ற போது...

வருபவர்கள் ஈரோசினர் அல்ல புலிகளே தான். உங்களுக்கு ஒன்று தெரியுமா? பாராளுமன்றம் என்று பக்கமே பார்க்காத ஈரோஸினர் ஏன் இப்போது இவ்வளவு அவசரப் படுகின்றனர்?

ஆச்சரியமான செய்தி உண்டு. அதாவது பிரேமா மலையாள சூனியக்காரர் இரண்டு பேரை இலங்கைக்கு வரவழைத்துள்ளார். அவர்களைப் பயன்படுத்தி அவர் எங்களுக்கு சூனியம் செய்துள்ளார்.

ஆம், பாராளுமன்றத்துக்கு (யாருமில்லாத சமயம்) அவர் இரண்டு சூனியக் கார்ர்களையும் அழைத்துக் கொண்டு பாராளுமன்றம் சென்றார். சுமார் ஆறரை மணியளவில் சென்ற இவர்கள் நாம் அமரும் ஆசனங்கள் அனைத்திலும் எண்ணை போன்ற ஒரு திரவத்தைப் பூசி பின் தூசி போன்ற ஒரு மாவினை பூசியிருக்கிறார்கள். அத்தோடு தான் அமரும் ஆசனத்தைச் சுற்றி ஏதோ ஒரு வட்டம் போட்டு வைத்திருக்கிறார். நான் இதனை பாராளுமன்றச் செயலாளர் மூலம் ஏற்கெனவே அறிந்திருந்தால், நாம் விகாரையின் புனித நீர் கொண்டு ஆசனங்களைக் கழுவி விட்டுத்தான் அமர்ந்தோம். இது பிரேமாவுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்திருக்க வேண்டும்.

அதி உத்தம ஜனாதிபதி, சரவ வல்லமை கொண்ட ஜனாதிபதி... சூனியமும் மந்திரமும்தான் வாழ்க்கை என்று மாறிப்போன இந்த நிலையில் இலங்கை அரசியல் போகின்றதென்றால்... பாவம் ஜனநாயகம் பேய் பிடித்து அலைகிறது. ■



கட்சிப்பூசலைத் தவிர்ப்பதற்காக ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி தலைவி பதவியை கடந்த சனியன்று தன் மகனுக்குக் கொடுத்த தாய் ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்கா

## ஜனநாயகத்திற்கு பேய் பிடித்து விட்டது

விஞ்ஞானத்தையும் தொழிநுட்பத்தையும் பற்றிப் பேசிக் கொண்டிருந்த பிரேமதாசாவுக்கு மெஞ்ஞானமும் சூனியமும் தஞ்சமாகிப் போய்விட்ட நிலை சிரிப்பையும், இலங்கை அரசியல் மீது வியப்பையும் வினோதத்தையும் ஊட்டுகிறது. ஆம், அண்மையில் திருமதி ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்கா (விசேட பத்திரிகை ஒன்றிற்கு) அளித்த பேட்டியின் போது வெளிவந்த தகவல்கள் இவை.

திருமதி ஸ்ரீ மாவோ எழுபத்தைந்து வயதைத் தாண்டி அரசியலில் நடைபோடும் உலகின்

றேன். இவை எல்லாம் அரச தரப்பு உறுப்பினர்களைத் தன்பக்கம் இழுக்கச் செய்யும் நடவடிக்கைகள்.

வெளிப்படையாகவே கேள்விகளுக்குப் பதிலளித்துக் கொண்டிருக்கும் இவர் ஒரு இடத்தில் குறிப்பிடுகிறார்...

பிரேமதாசா புலிகளுக்கு ஆயுதம் கொடுக்கும் போதே உணர்ந்திருக்க வேண்டும். அவர்கள் சக்திவாய்ந்த ஒரு குழு என்று தெரிந்தும் ஏன் இப்படிச் செய்தார். அவர்கள் யாரைக் கொன்றார்கள். தமிழ் தேசிய இராணு

எனக்குத் தெரிந்தவரை நிபந்தனையற்ற போர் நிறுத்தம் ஒன்று கேட்டுத்தான் வருகிறார்கள். அதிகாரபூர்வமாக இது அறிவிக்கப் படாது விட்டாலும், சில இடங்களில் இருந்து அரச துருப்புக்கள் பின்வாங்கியிருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது என்கிறார்.

பிரேமதாசா யுத்த நிறுத்தத்திற்கு உடன்பட்டு விட்டாரா? என்ற போது, சாத்தியக்கூறுகள் உண்டு என்றார். அவர்களின் வாக்கைப் பெற பதவியில் நிலைத்து நிற்க எதையும் செய்வார் பிரேமா. இங்கே இன்னுமொரு



# ஒப்பரேசன் வலம்புரி

## ஒரு கண்ணோட்டம்

ச. விசுவன்

கடந்த சில நாட்களாக யாழ்ப்பாணத்தை கைப்பற்றும் முகமாக இலங்கை அரசின் இராணுவத்தால் மேற்கொண்டு வரும் தாக்குதலே இந்த 'ஒப்பரேசன் வலம்புரி' ஆகும்.

ஒப்பரேசன் வலம்புரி என்று பெயர் வரக் காரணம் என்ன தெரியுமா? கிடைத்தற்கரிய வலம்புரிச் சங்கு மிகவும் அதிஷ்டவசமான ஒன்றாம், இந்த அதிஷ்டம் தமக்கும் கிடைக்க வேண்டும் என்றுதான் இலங்கை இராணுவமும் இந்தப் பெயரைச் சூட்டியதாம்.

யாழ்ப்பாணத்தில் இந்த தாக்குதலின் முதற்படியாக ஊர்காவற்றுறையில் இருந்து முன்னேறிய இராணுவம் மண்டைதீவைக் கைப்பற்றி உள்ளது. இந் நடவடிக்கையின்போது இராணுவம் எந்த எதிர்ப்பையும் சந்திக்கவில்லை. இராணுவம் மண்டைதீவைக் கைப்பற்றி இருப்பதால் தற்போது அவர்களுக்கு யாழ் நகரை நோக்கி தாக்குதலை நடாத்துவது சுலபமாக உள்ளது. தற்போதைய நிலைமையில் தீவுப் பகுதி முழுவதும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதால் புலிகளின் எதிர்ப்பின்றி மண்டைதீவுக்கு இராணுவத்திற்கான உதவி ஹெலி மூலம் இலகுவாக கிடைக்கும் மேலும் கப்பல் மூலம் ஊர் காவற்றுறை, மண்டைதீவுக்கும் உதவி கிடைக்கும்.

இது மட்டுமல்ல மண்டைதீவில் இருந்து ஒரு மைல் தூரத்தில் இருக்கும் யாழ்நகரை இராணுவத்தின் ஆட்லறி ஷெல்கள் இலகுவாகத் தாக்கும். இத் தாக்குதல்கள் ஏற்கனவே தொடங்கிவிட்டன. புலிகளிடம் இருக்கும் அதிக தூரம் சுடும் 50 கலிபர் துப்பாக்கிகள் மண்டைதீவில் இறங்கும் ஹெலிகளை எந்த வகையிலும் தாக்காது. இதற்கும் மேலாக அமெரிக்க இராணுவம் வியட் நாமில் மேற்கொண்டது போல் இவர்களும் படகுகள் மூலம் குருநகர், அரியாலை, நாவாந்துறைப் பகுதிகளை சுலபமாக சென்றடைந்து தாக்கலாம்.

ஆனால் இலங்கை இராணுவம் இதுவரைகாலமும் இப்படியான தாக்குதலில் வெற்றி அடையவில்லை. விமானப்படையையே நம்பியிருக்கும் அவர்கள் நிச்சயம் 'ஒப்பரேசன் லிபரேசன்' பாணியில் பாரியகுண்டுத் தாக்குதலை நடாத்தி விட்டு பின் முன்னேற வாய்ப்புகள் உள்ளது. இதற்கு முன்னோடியாக யாழ்ப்பாணத்திற்கு வெளியே இராணுவம் பூநகரி வரை முன்னேறி முகாம் ஒன்றை அமைத்துள்ளது. யாழ்ப்பாணத்தில் அராலித்துறையில் நிலைகொண்ட இராணுவம் வடக்குப்பக் கமாக கடல் வழி நகர்த்தப்பட்டு பொன்னாலையில் நிலை கொண்டுள்ளனர்.

மொத்தத்தில் யாழ்க் குடாவைச் சுற்றி அநலைதீவு, எழுவைதீவு, நெடுந் தீவு, நயினாதீவு, கச்சதீவு இவை யாவும் இராணுவத்தின் வசமாக உள்ளது. இவற்றை எல்லாம் வைத்துப் பார்க்கும் பொழுது யாழ்க் குடாவைச்சுற்றி உள்ள கடல் பகுதி முழுவதும் இப் போது இராணுவத்தின் வசம். யாழ்க் குடாவுக்குள் பலாலி, மயிலிட்டி, காங்கேசன்துறை, வசாவிளான், ஆகிய இடங்களை சுற்றி 2 மைல் சுழுக்கு இலங்கை இராணுவம் எவ்வித தடையுமின்றி நடமாடமுடியும்.

பொன்னாலையில் இருந்து இராணுவம் வெற்றிகரமாக காங்கேசன் துறை வரை கரையோரமாக தம் நிலையை வலுப்படுத்தினால், இந்திய இராணுவம் முன்னேறியது போல் இவர்களும் முன்னேற சாத்தியக்கூறுகள் உள்ளது. 1987 இல் இந்திய இராணுவம் யாழ்நகரைக் கைப்பற்றும் பல காரணங்கள் இருந்தாலும் புலிகள் எதிர்பாராதபடி பரந்த அளவில் சகல திசைகளிலும் முன்னேறியதும் ஒரு காரணம். இதே வழியை இலங்கையும் பின்பற்றும் ஒரே நோக்குடன்தான் தன் நிலைகளை


7ம் பக்கம் பார்க்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நடந்த சில உண்மைகளை வெளிக் கொணரும் நோக்கில் வெளியான சிறந்த நாவலான புதியதோர் உலகத்தை நாம் ஐரோப்பாவில் உள்ள தமிழ் மக்களுக்காக எந்த வித கட்சியோ, அமைப்போ சார்பாக இல்லாமல் தொடர்ச்சியாக பிரசுரிக்கவுள்ளோம். வாசகர்களின் விமர்சனங்களை ஈழபூமி வரவேற்கின்றது.




1

தார் வீதியால் நடந்து வந்தவர்கள் அந்தக் குச்சொழுங் கையில் திரும்பியதும் கடற்கரை அண்மித்து விட்டதை உணரத் தொடங்கினார்கள்.

இரண்டு பேர் மட்டும் அக்கம்பக்கமாக நடந்து போகும் அகலமுள்ள அந்தச் சிறிய ஒழுங்கை ஒன்று அல்லது இரண்டு வீடுகளைத் தாண்டியதும் அந்த மனிதர்களைப் போலவே தன்னடக்கத்துடன் வளைந்து செல்லும். அக்கிராமத்து மக்கள் மாதிரி ஒழுங்கைகளும் கம்பீரமாக நீட்டி நிமிர்ந்து செல்லும் துணிச்சலை கண்டறியாததுகள்.

மனிதர்களதும் கால்நடைகளதும் காலடி அடிக்கடி பட்டு நலிந்து போன புற்களின் மத்தியில் இடையிடையே பீறிட்டு நிற்கும் தரையில், வெண்மையாக கடற்கரை குருமணல் கோலம் போட்டிருந்தது.

ஒரே திசையில் வேகமாகச் சாய்ந்தாடும் தென்னை மரங்களிலிருந்து வீசிய கடற்காற்றின் குளிர்மை வியர்வையால் நனைந்த உடல்களைச் சில்லிட்டு அசுவாசப் படுத்திக் கொண்டிருந்தது.

சங்கர் அனைவருக்கும் பின்பாக சென்று கொண்டிருந்தான். ஒரு மணி நேரத்திற்கு முன்னம் தான் நடேசன் என்ற தன் சொந்தப் பெயரை சங்கர் என்று மாற்றியிருந்தான்.

எல்லோருக்கும் முன்பாக அவர்களை வழிகாட்டி அழைத்துச் சென்றவர், சற்றைக்கொரு தடவை பின்னே திரும்பிப் பார்த்து வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தார். பாதை திடீர் திடீரென்று வளைந்து முறிந்து செல்வதால் அவரை முன்னே விட்டு அதிகம் பின்வாங்காமல் எல்லோரும் ஒரே வேகத்தில் சென்று கொண்டிருந்தார்கள்.

பூவரசம் வேலிகளைத் தாண்டி வளவுக்குள் இருந்த பெண்கள் அந்தந்த இடத்தில் இருந்தவாறு இவர்களை ஆர்வமுடன் வேடிக்கை பார்த்துக் கொண்டு அப்படியே இருந்தார்கள். இது அவர்களுக்கு வழக்கமாகிப் போன பழகிய காட்சி தான் என்றாலும் ஒவ்வொரு முறையும் ஏதோ சுவாரசியத்தை புதிது புதிதாக காணும் குறுகுறுப்பு குறையாமல் இருந்தார்கள். முன்னே சென்ற அந்த வழிகாட்டி வேகத்தை குறைத்து பதிந்த சிறிய ஒலைக்கொட்டிலுக்குள் சென்ற போது எல்லோரும் ஒரு ரயிலைப் போல அவரை பின் தொடர்ந்து வேகத்தை குறைத்து நின்றார்கள்.

நடந்து வந்த களைப்பு தீர மாமர நிழலின் கீழ் குழுமி நின்ற அவர்கள் மேலே அண்ணாந்து காய்களைத் தேடினார்கள். அதே வேளை அந்த சிறிய ஓலைக் குடிசையும் அதில் இருந்து யார் வெளிப்படப் போகிறார்கள் என்றும் அடிக்கடி கண்களை அலைபாய விட்டார்கள்.

நடுத்தர வயதான வீட்டுக்காரர் தூக்கத்திலிருந்து விழித்தவர் போல கண்களைக் கசக்கிக் கொண்டு வெளியே வந்தார். இவர்களைப் பார்த்தவுடன் மகிழ்ச்சியுடன் சிரித்துக் கொண்டார்.

'மொத்தம் பதினைஞ்சு பேர். விபரம் இந்தா இருக்கு'

பயங்கரப் பறவை ஒன்றின் கீச்சிட்ட அலறல் ஒலியில் வழிகாட்டி வந்தவர் சப்தித்து விட்டு ஒரு காகிதத்தை நீட்டினார்.

அதைப் பெற்றுக் கொண்டதும் மறு பேச்சின்றி தொந்திக்கு மேலாக அவிழ்ந்து விழும் சாரத்தை ஒரு கையால் பற்றிக் கொண்டு உள்ளே திரும்பினார். போகும் போதே அந்தக் காகிதத்தை முன்னும் பின்னும் புரட்டிப் பார்த்துக் கொண்டார்.

வழிகாட்டி வந்தவர் அதே

'நான் போயிட்டு வாறன் எனக்கு அவசரமான வேலை இருக்கு' என்று கூறிக்கொண்டு திரும்பியவர் பின் ஏதோ நினைத்துக் கொண்டவராக அந்த இளைஞர்களைப் பார்த்து கூறினார்.

'இன்னும் ரெண்டு மணித்தியாலத்தில் வண்டி வந்திடும். அது மட்டும் நீங்க வெளிய திரிஞ்சு இந்த இடத்தை பழுதாக்கிட வேண்டாம். வெளியே யாரும் போக வேண்டாம்' என்று கண்டிப்போடு கடூரமாகக் கூறியவர் அந்த இளைஞர்கள் முகத்தில் நிழலாடிய சிநேக பாவத்தில் திருப்தி கொண்டவராக அப்படியே நின்று கொண்டு அவர்களில் இரக்கப் படுபவர் போல தொனியை மாற்றினார். ஆனாலும் அது முன்பு போலவே கரடு முரடாகக் கேட்டது.

'இன்னும் அரை மணித்தியாலத்தில் உங்களுக்கு சாப்பாடு வந்திடும். சாப்பிட்டுட்டு நல்லாத் தண்ணி குடியுங்கோ பிறகு நடுக் கடலில் தாகத்தில் தவிக்க வேண்டியிருக்கும்

அந்த இளைஞர்கள் ஒருவர் இருவராக அவரைச் சூழ நெருங்கி வந்தார்கள்.

'இண்டைக்கு காத்து கொஞ்சம் உரப்பு. உங்கபாடு கஸ்டம் தான். நல்லா தூக்கி அடிக்கும். ஆனால் பரவாயில்லை நீங்கள் விடுதலைக் கென்று வந்திட்டு இந்த கஸ்டங்களை சமாளிக்கத் தானே வேண்டும். நாளைக்கு றெயினிங்கிலோ பிறகு சண்டையிலோ இதைவிட மோசமான கஸ்டங்களை சமாளிக்க வேண்டும் தானே'

கலாசினிக்கோ வோட வந்தா எங்களுக்கே கதை சொல்லுவீங்க. இஞ்ச அப்படித்தான் கனபேர் திரியினம் போகேக்கை பூனை மாதிரி இருந்துட்டு இப்பவந்து எங்களையே மிரட்டுறாங்கள் என்று தன்பாட்டில் கூறிச்சென்ற வார்த்தைகளில் புதைந்திருக்கும் அங்கலாய்ப்பை உணரமாட்டாதவர்களாக அந்த இளைஞர்கள் குழம்பி நின்றார்கள் அவர்கள் அந்த சிறிய குடிசையை சூழ தனிமையில் விடப்பட்டார்கள்.

அந்த வீட்டுக்காரரும் அதன் பின் வெளியே வரவில்லை. இடையிடையே இருமி விட்டு தான் அந்த இருட்டறையில் இருப்பதை உறுதிப்படுத்திக் கொண்டார்.

அந்த இளைஞர்கள் ஒவ்வொரு பக்கமாக இரண்டு மூன்று பேர் கொண்ட சிறுசிறு குழுக்களாக வெளி முற்றத்தில் களை உயர்த்தி வெளியே யாரும் வருகிறார்களா என்று ஆவலுடன் பார்த்துக் கொண்டு அந்தச் சஞ்சிகையை படிப்பதிலேயே கவனமாக இருந்தான். மனம் லயிக்கவில்லை.

இரண்டு மணி நேரத்திற்கு முன்னம்தான் சங்கர் தான் ஆயுதப் பயிற்சிக்கு இந்தியா போகும் விபரத்தை நிர்மலாவிற்கு தெரிவித்து விடவேண்டும் என்று முடிவெடுத்தான். நாதனிடம் எல்லா விபரத்தையும் கூறும் போது உன்னிப்பாக அமைதியாக கேட்டுக் கொண்டிருந்து விட்டு அவன் பேசி முடித்ததும் நேரத்தை பார்த்துக் கொண்டு நாதன் கூறினான்.

'சரி நான் எல்லாத்தையும் பார்க்கிறேன் நீ வாற ஆக்களோட சுணங்காமல் கரைக்குப்போ நீ போக முன்னம் உன்னை வந்து சந்தித்து விசயத்தை சொல்லிறன்'

சங்கர் சஞ்சிகையில் மனம் லயிக்காமல் நாதனையே எதிர் பார்த்து குழம்பிக் கொண்டிருந்தான்.

நாதனைச் சந்தித்த அன்றைய மாலைப் பொழுதில் நிர்மலாவைப் பற்றிய கதையிலேயே நேரம் போய்விட்டது. வீட்டுப் பொறுப்புகள் பற்றி எதுவும் சொல்லாமல் போனது மனதை உறுத்தியது.

'நாதன் வந்திடுவான் வீட்டையும் அடிக்கடி போய்ப்பார்த்து நிலைமையை தெரிவிக்கும்படி சொல்ல வேண்டும்'

அவன் தனக்குத் தானே நம்பிக்கையூட்டிக் கொண்டிருந்தான். 'மகன் நீ ஒரு இயக்கத்தில் இருக்கிறதென்றா அதுக்கு முழுதும் நம்பிக்கையுள்ளவனாக இருக்க வேண்டும். பூரணமாக உன்னை அர்ப்பணிக்க வேண்டும். நான் உனக்கு அப்பா மாத்திரம் இல்லை நான் ஒரு கம்யூனிஸ்ட். அந்தக் கடமையில் சொல்லிறன். நீ இந்த குடும்பத்திற்கு என்ன உதவி செய்தாய் என்று நான் ஒரு போதும் கணக்கு பார்க்க விசுவாசமா இருக்கிறாயா என்ற கணக்குத்தான் பார்ப்பன்'

சங்கர் எட்ட நின்றபடியே அவரைப் பார்த்தான்.

கட்டையாக வெட்டப்பட்ட தலைமுடி. துருத்திக் கொண்டு நிற்கும் வெண்மையான முன் வாய்ப்பற்கள். கூனலாண வளைந்து மெலிந்த உயரமான உடல் வாகு. 'யாருக்காக அழுதான்' திருட்டுமுளி ஜோசப்பின் கெந்தல் நடை. குரல் மாத்திரம் அந்த தோற்றத்தோடு பொருத்தமில்லாத காலை நேர அலாரம் ஒலியாக கீச்சிட்டது.

இளைஞர்கள் அருகில் நெருங்கி தங்கள் பயப்பீதிகளை கேள்விகளாக்கிக் கொண்டிருந்தார்கள்.

'அண்ணெ! எவ்வளவு நேரத்தில் இந்தியாவிற்கு போய்ச் சேருவம்"

'தோழர் இப்ப நேவி விட்டு கலைக் கிறதில்லையா'

அந்தக் கேள்விகள் அவருக்கு பிடித்தமானதாக இருந்தது உற்சாகமடைந்தவர் போல் அதே கீச்சிட்ட குரலில் அலறினார்.

'நேவி இந்த காத்துக்குள்ள எங்க கலைக்கப்போறான். அவ

பரவினார்கள். சிலர் முன் திண்ணையிலேயே மல்லாந்து சாய்ந்தார்கள் எல்லோரும் மறக்காமல் தம் கைகளில் இருந்த உடுப்புப் பாசல்களை திண்ணையில் ஒரு மூலையில் குவித்தார்கள்.

அவர்கள் எல்லோரும் அறிமுகமாகி அதிக நேரம் ஆகவில்லை தமது சொந்த ஊர் பேர்களைக் கூறக்கூடா தென்ற கண்டிப்பான கட்டளையை மீறிவிடாத எச்சரிக்கையுடன் தமக்கு மாற்றப்பட்ட புதிய பெயர்களுடன் பரீட்சயமாகும் குறுகுறுப்புடன் ஒரு புதுமையான அனுபவத்துக்குள்ளாகிக் கொண்டிருந்தார்கள்.

சங்கர் ஓர் மூலையில் இடம் பிடித்துக் கொண்டு கையில் கிடைத்த ஒரு பழைய சஞ்சிகையை புரட்டிக் கொண்டிருந்தான். நாதன் இன்னும் வரவில்லை!

ஒரே அங்கலாய்ப்பாய் இருந்தது.

எப்படியும் சங்கரை வந்து சந்திப்பதாய் உறுதி கூறியிருந்தான். அவனுக்கு ஏற்கனவே அந்த [illegible] சங்கர்

இரண்டு நாட்களுக்கு முன் அப்பா ஆணித்தரமாக கூறிய அந்த வார்த்தைகளை ஆசீர் வாதமாக ஏற்றுக் கொண்ட சம்பவத்தை நினைத்துப் பார்த்தான்.

அம்மா திக்'பிரமை அடைந்தவள் போல் மலங்க மலங்க விழித்ததைக் கண்டு இவன் வாஞ்சையுடன் அவள் கைகளைப் பற்றிக் கொண்டு கூறினான்.

'அம்மா நீங்க வீட்டில இருந்து கொண்டு இவ்வளவு நாளும் அப்பாட போராட்டங்களுக்கெல்லாம் ஆதரவு காட்டினீங்களே. அது போன்ற நியாயமான போராட்டம் தான் அம்மா இது. இதற்கு தடை சொல்லாதீங்க'

அவள் எதுவும் பேச முடியாமல் இவன் அடர்ந்த தலைமுடியை பற்றிப் பிடித்து மார்பில் முகத்தை புதைத்துக் கொண்டு குழுங்கி குழுங்கி அழுதாள்.

தங்கம் அவனை நீ தடுக்காதை அவன் உயிரை வெறுத்து இப்படிப் போகவில்லை அல்லது உயிரைக் காப்பாற்றி கொள்றதுக்கும் இப்படி ஓடவில்லை. உயிர் வாழும் அர்த்தத்தை புரிந்து கொண்டு தான் இந்த முடிவை எடுத்திருக்கிறான்'

அவள் அழுகையை மீறிய அவசரத்துடன் பீறிட்டு பொருமினாள். 'நீங்க அபசகுனமாய் எதுவும் பேசாதீங்க என்ட பிள்ளைக்கு நான் சாக முன்னம் எதுவும் நடந்திடப்படாது எண்டு தான் பயப்பிடுறன்'

சிறு குழந்தை போல் தேம்பி அழும் அவள் பரிதாபத்தை கண்களை அகலவிரித்து அப்படியே பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

அவள் தன் முன்னாள் இப்படி திடீரென்று ஒரு குழந்தை போல குறுகிப் போய் ஆற்றாமையை வெளிப்படுத்திக் கொண்டிருப்பாள் என்று அவன் சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை .

அம்மாவோடு அவன் இம் மாதிரி விசயங்கள் ஒரு போதும் பேசுவதே இல்லை அப்பாவே அவனுக்கு எல்லாம். அவனது நம்பிக்கைக்குரிய ஆலோசகரும் தூரதிருஷ்டியுள்ள வழிகாட்டியும் அவரேதான். அந்த வழக்கத்தில் அவன் தமிழகத்திற்கு பயிற்சிக்கு போகும் விஷயத்தை முதலில் அப்பாவிடமே பிரஸ்தாபித்தான்.

அப்பா அவனை ஏறிட்டு பார்த்துவிட்டு வழமைக்கு மாறாக மௌனமாக இருந்தார். சிறிது நேர யோசனையின் பின் அவரே இதை அம்மாவிடம் கூறும்படி அனுப்பியும் வைத்தார். எதையும் வெளிப்படையாகவே பேசிய பழக்கத்தில் அம்மாவிடம் அப்பட்டமாக அவன் கூறிவிட்ட பின்பு தான் அவள் முகத்தில் ஏற்பட்ட கலவரத்தை தாங்கமாட்டாமல் குழம்பி நின்றான். 'ராசா நீ மூத்த பிள்ளை எந்த அரசியல் வேலையானாலும் ஊரில் இருந்து கொண்டு செய் எங்களை விட்டிட்டு மட்டும் போயிடாதை.'

அவள் பொங்கி எழும் குமுறலை தாங்கமாட்டாமல் பரிதவித்து அப்பா வந்தார். நீண்ட பிரயத்தனமெடுத்து அவளை ஆறுதல் படுத்தினார். அதன்பின் வழிந்தோடும் வியர்வையை துண்டால் துடைத்துக் கொண்டு குழம்பி நிற்கும் அவனிடம் வந்தார். 'மகன்! அம்மா நல்லா நொடிஞ்சு போயிட்டா அவளை நீ சாதாரணமாக நினைக்காதே அவள் தனக்கென்று அபிலாசைகள் ஏதும் இல்லாமல் கடந்த காலம் பூராக என்னோட ஒத்துழைச்சவள். ஆனால் அவள் இப்போது கலங்கிறதெல்லாம் உன்னோட உயிரை நினைச்சுத்தான்' என்று கூறி சிறிது அமைதியானார்.

(அடுத்த இதழில் தொடரும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஒப்பரேசன்........
5ம் பக்கத் தொடர்ச்சி

சகல இடங்களிலும் பலப்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் புலிகள் இராணுவத்தின் சுற்றிவளைப்பை எப்படி முறியடிக்கப் போகின்றார்கள் என்பதுதான் தற்போதய கேள்விக்குறி. புலிகள் கண்ணி வெடித்தாக்குதல் மூலமும் கரும்புலிகளின் (தற்கொலைப்படை) அதிரடித் தாக்குதலாலும் தரையால் முன்னேறும் இராணுவத்தை தடுத்தாலும் விமானப்படைத் தாக்குதலை எவ்வளவு தூரம் சமாளிப்பார்கள் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். 1986 இல் வடமராட்சியில் நடைபெற்றது போல் தரை, கடல், விமான தாக்குதல் ஒரே சமயத்தில் நடைபெற்றால் புலிகளுக்கு பின்வாங்குவதை தவிர வேறு வழி இருக்காது.

## கல் ஆனாலும்......
3ம் பக்கத் தொடர்ச்சி

அறிந்து இருப்பதைப் போன்றது. இரண்டாவது அந்தப்பிரச்சினையை தீர்ப்பதற்குரிய வழிமுறையைச் சிந்திப்பது. ஒரு நுளம்பைக் கொல்வதா? அந்த வர்க்கத்தையே அடியோடு அழிப்பதா? எதிர்காலத்தில் மலேரியா நோயை கட்டுப்படுத்தும் என்று சிந்திப்பது போன்றது. இறுதியாக எடுக்கப்படும் தீர்மானத்தை நிறைவேற்றுகின்ற வழி தொடர்பாக ஆராய்வது.

பெண்ணடிமை என்பது எமது சமூக அமைப்பின் அடிமட்டத்தோடு ஒன்றிக் கலந்து விட்ட விடயம். பொருளாதார, சமூக பிரச்சினைகளை தீர்த்து வைப்பதில் ஆண்மட்டுமே வல்லமை கொண்டிருந்தமை இதற்கு ஒரு காரணமாகும். இதனை எப்படித் தீர்க்கலாம்? ஒவ்வொரு அங்கத்தவனும் அதாவது ஒவ்வொரு தமிழ் பேசும் குடிமகனும் விளங்கிக் கொள்கின்ற வகையிலே அந்த மக்களைச் சென்றடையக் கூடிய விதத்திலே உரிய ஊடகங்களை கண்டு அதனூடாக அந்த மக்களுக்கு பிரச்சினையைப் புரிய வைப்பது அவசியம். கல்வி என்பது இங்கே ஒரு அவசியமான

ஆயுதம். பயிற்றப்படும் ஒவ்வொரு பிள்ளையும் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொருளாதார, சமூக நன்மை தீமைகளை தமது சொந்த விருப்பு வெறுப்புகளாகத் தீர்மானித்துக் கொள்ளும் உரிமை உண்டு என்பதை தெளிவு படுத்தும் வகையில் கல்வியை அமைத்துக் கொள்ளுதல் எந்தக் காலத்திலும் ஆண் பெண்ணை விட உயர்ந்தவன் என்ற மனோ நிலையை பிள்ளைகளிடம் வளர்வதைத் தடுப்பது இதன் முக்கிய நோக்கம். இந்தத் தீர்வின் பிரகாரம் இருவர்க்கத்திற்கும் இடையே ஒரு பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்தும் விளிப்புணர்ச்சியில் ஒரு புரட்சிகர வழியை அமைப்பதுமே உண்மையான விடுதலையை ஈட்டித் தரும்.

ஆண்களைத் திட்டித் தீர்த்து விட்டு பெண்கள் ஊர்வலம் போவதோ! பெண்களை ஒதுக்கி விட்டு முற்போக்கு இளைஞர்கள் பெண்விடுதலை பற்றி சிந்திப்பதோ, பட்ட மரத்திற்கு நீர் ஊற்றி பழம் பறிக்க வைக்கும் முயற்சியாகவே முடியும்.

எனவே! சமுதாயம் போடும் முற்போக்கான விதிகளை உடைப்போம். அங்கே விளிப்போடு ஒரு சமுதாயம் அமைப்போம் என்று ஒவ்வொரு பிரஜையும் சிந்தனை செய்யாவிடில் எத்தனை வருட காலம் ஏட்டிலே இருந்த விடுதலை காற்றிலே அடிபட்டு போகும் என்பது அறுதியான உண்மையாகி விடும்.

86 வடமராட்சித் தாக்குதலுக்கு இந்தியா புலிகளுக்கு உடனடியாக ஆயுத (விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள், மோட்டார் குண்டுகள்) உதவி வழங்கியும் சமாளிக்க முடியாமல் பின்வாங்கியது தெரிந்ததே. யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றினாலும் புலிகள் வன்னி காட்டுப்பகுதியை நோக்கி நகர்வதும் தற்போதைய நிலையில் மிகவும் கடினம். இவர்கள் வழமையாக பாவிக்கும் பாதைகளான பூநகரி, சங்குப்பிட்டி, வெற்றிலைக்கேணி ஆகியவை தற்போது இராணுவத்தினர் வசம். புலிகளுக்கு இதனைத் தவிர வேறு வழிகள் இருந்தாலும் கடல் மூலம் உதவிகள் உள்ளே வருவது அல்லது வெளியே போவது என்பது தற்போது மிகவும் சிரமமான ஒன்று.

இந்தியா தனது கடல் எல்லையை மிகவும் இறுக்கமாக வைத்துள்ளது. இந்த நிலையில் இலங் கை இராணுவம் பரந்த அளவில் தாக்குதலை நடாத்தி முன்னேறுமாயின் புலிகள் எவ்வளவு தூரம் சமாளிப்பார்கள் என்பது கேள்விக்குறி. இருப்பினும் புலிகள் தம்மிடம் இருக்கும் ஆயுத பலத்தை வைத்து ஒரு வாரத்துக்கு சமாளித்து இராணுவத்துக்கும் பலத்த சேதத்தை ஏற்படுத்துமாயின் இலங்கை இராணுவம் நிச்சயமாக சில இடங்களை விட்டு பின்வாங்கும். மேலும் இலங்கை விமானப் படையின் தாக்குதலை முறியடிக்க வேண்டுமாயின் விமான எதிர்ப்பு ஏவுகணைகள்தான் ஒரே வழி ஆனால் இவற்றை புலிகள் எப்போ பெறுவர் என்பது யாருக்கும் தெரியாது.

தற்போது இலங்கை இராணுவம் யாழ்குடாவில் தன் நிலைகளை பலப்படுத்தியுள்ள அதே வேளையில் வவுனியா, முல்லைத்தீவில் பாரிய தாக்குதலை மேற்கொள்ள திட்டமிட்டு வருகிறது.

இதன் மூலம் வவுனியாவிலும் முல் லைத்தீவிலும் தன் நிலைகளை மேலும் ஸ்திரப்படுத்தி புலிகளின் ஊடுருவலை தடுக்க நினைத்துள்ளது.

இந்த வலம்புரிச் சங்கால் புலிகளுக்கு அதிஸ்டமோ அல்லது இலங்கை இராணுவத்திற்கு அதிஷ்டமோ தெரியாது ஆனால் அப்பாவித் தமிழ் மக்கள் உயிர் உடைமைக்கு அழிவு என்பது நிச்சயம்.

## யாழ் குடாநாட்டின்......
1ம் பக்கத் தொடர்ச்சி

எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை சாவகச்சேரிக்கு தெற்கே உள்ள பூநகரியினூடாக இராணுவத்தினர் நகர்த்தப்பட்டு வருவதாகவும், பொன்னாலை கரையோரப்பகுதி இப்பொழுது இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதாகவும் தெரிய வருகிறது.

## இலங்கை இராணுவத்தின்...
2ம் பக்கத் தொடர்ச்சி

ஒலிபெருக்கி வாயிலாக அறிவிக்கப்பட்டே இச்சுற்றிவளைப்பு இடம்பெற்றது. மேலும் பிரதான வீதியை விரைவில் போக்குவரத்துக்கு திறந்துவிடவுள்ளதாகவும் இராணுவச் சோதனைகள் இனிமேல் நொச்சிமோட்டையிலேயே இடம்பெறும் என்றும் படையினர் அறிவித்துள்ளனர்.

பூந்தோட்டப்பகுதியில் நிலைகொண்டிருந்த ராணுவத்தினர், நொச்சிமோட்டைக்கு முன்னேறியதை அடுத்து மாறம்பைக்குளம், சாந்தசோலை, பூந்தோட்டம் பகுதிகளில் உள்ள மக்கள் எவ்வித ராணுவ சோதனையும் இன்றி வவுனியா நகருக்குள் நுழையலாம், ஆனால் வவுனியா வடக்கு பகுதியில் தொடர்ந்தும் ஊரடங்கு அமுலில் இருக்கும்.


**JAFFNA HOUSE**

90, Tooting High Street,
London SW17
DO YOU FANCY JAFFNA FOOD
IN LONDON ?
Visit us opposite Tooting Broadway Tube Station
We delight you with

**SPECIALS :**
FRIDAYS - VEGETARIAN THALI
SATURDAYS - KOOL
SUNDAYS - JAFFNA STYLE FRIED CHICKEN & NOODLES

Caterers for weedings & parties. Takeaways £15 and over FREE delivery locally

TEL : 081-672 7786, 081-767 6668

Open: Sunday - Thursday 12.00 noon to 12.00 midnight
Friday - Saturday 12.00 noon to 1.00 am



## மன்னிக்க வேண்டி......

இந்த வாரம் வெளிவர வேண்டிய ஐரோப்பிய பொருளாதார கூட்டமைப்பில் அகதிகளுக்கு என்ன நடக்கும் என்ற, கட்டுரை மேலும் சில ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டி இருப்பதால் இவ்வாரம் வெளிவராது என்பதை அறியத் தருகிறோம். இக் கட்டுரை அடுத்த வாரம் பிரசுரிக்கப்படும்.

## நொச்சிமோட்டையில்.....
1ம் பக்கத் தொடர்ச்சி


பிரிவொன்று வடபகுதி நோக்கி நகர்வதாகவும், வவுனியா - மன்னார் பாதையில் செட்டிகுளம் பகுதியிலும் மேலதிக இராணுவம் மன்னார் நோக்கி நகரும் நோக்குடன் அதிகரிக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

இதே வேளை கொழும்பில் இருந்து வடபகுதி செல்லும் அறுபது பயணிகள் பயணத்தைத் தொடரமுடியாத நிலையில், வவுனியா புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் தங்கியிருக்கின்றனர்.




இலங்கையின் இன்றைய நிலை

நன்றி ஐலண்ட்.



www.tamilarangam.net



# மக்கள் நடமாடத் தடை

வடபகுதியில் வெற்றிலைக் கேணியைச் சுற்றியுள்ள பகுதியில் 9 இடங்கள் பகல் இரண்டு மணிக்கு மேல் மக்கள் நடமாடத் தடைசெய்யப்பட்ட பிரதேசங்களாக இலங்கை இராணுவம் அறிவித்துள்ளது.

பச்சிலம்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள சங்கத்தாரவயல், புல்லுவெளி, புதுமடம், நித்தியவெட்டை, கட்டைக்காடு, முள்ளியான், பெரியபச்சிலம்பள்ளி, கொந்தார்குழம், இயக்கச்சி ஆகிய பகுதிகளே மேற்படி தடை செய்யப்பட்ட பிரதேசங்கள் ஆகும். இதற்கு காரணம் அப்பகுதிகளில் பெருமளவில் கண்ணி வெடிகள் வைக்கப்பட்டிருப்பதே என அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அப்படியென்றால் இந்தக் கண்ணி வெடிகள் பகல் இரண்டு மணிக்குப் பின்தான் வெடிக்குமோ?

# அவசரகாலச் சட்டம் மேலும் நீடிப்பு

கடந்த வியாழக்கிழமை அவசரகாலச் சட்டம் 127 வாக்குகள் ஆதரவாகவும் 67 வாக்குகள் எதிர்ப்பிலும் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஆதரவாக 125 யு.என் .பி உறுப்பினர்கள், 2 ஈரோஸ் உறுப்பினர்கள் வாக்களிக்க எஸ்.எல்.பி, எம்.ஈ.பி, யு.எஸ்.ஏ ஆகியன எதிர்த்து வாக்களித்தது.

# பாராளுமன்றத்தில் நம்மவர் பேசியவை.......

(சண்முகரட்ணம்)

திரு. கே. நவரத்தினம் கூட்டணி: நீங்கள் இராணுவ நடவடிக்கை மூலம் பிரச்சினையை தீர்க்கலாம் என்பது தவறு அரசியல் தீர்வு தான் இதற்கு ஒரே வழி. பிரபாகரன் எங்கே என்று எம்மிடம் கேட்கும் நீங்கள் தான் அவர்களை நட்சத்திர ஹோட்டலில் வைத்து பராமரித்தீர்கள் அவர் எங்கே என்று உங்களுக்கு தானே தெரியும். மேலும் வடக்கு, கிழக்கு இல் இருக்கும் அகதிகளுக்கு பிரச்சினைகளைத் தீர்க்க எந்த வகையில் நடவடிக்கை எடுத்தீர்கள்? என்று வினாவினார்.

திரு. கே சிறினிவாசன் கூட்டணி: ஆயிரக் கணக்கில் மக்கள் கொல்லப்படுகின்றனர். பலர் வீடு வாசல்களை இழந்துள்ளனர். ஆனால் அரசு என்ன செய்கிறது? தமிழர்கள் ஆயுதங்களை தூக்கியதும் அரசு அவர்களுக்கு பாடம் புகட்ட முனைந்தது ஆனால் புலிகளை அழிப்பதற்கு வழி தெரியாமல் திண்டாடுகின்றது.

# இந்திய வெளியுறவுச் செயலாளராக தீக்ஷித்

(இந்தியா அக். 29)

இந்திய வெளியுறவு அமைச்சின் புதிய செயலாளராக ஜோதிந்திரநாத் தீக்ஷித் நவம்பர் 30ம் திகதி பதவி ஏற்பார். இவர் மிகவும் நெருக்கடியான கால கட்டத்தில் இலங்கையில் இந்திய தூதுவராக பணியாற்றினார். இலங்கை இந்திய உடன்படிக்கை (1987) உருவாக காரணமாக இருந்தவரும் இவரே.

# புலிகளால் இந்திய இளைஞருக்கு பயிற்சி

(இந்தியா அக். 28)

புலிகளால் பயிற்சி அளிக்கப்பட்ட இந்திய இளைஞர் தியோடர் சார்ல்ஸ் கடந்த புதன் கிழமை தமிழ்நாட்டில் திண்டுக்கல் என்னும் இடத்தில் கைதானார்.

இவர் கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் ஆயுதப் பயிற்சி பெற்றதாகவும் இவருடன் மேலும் பத்துப்பேர் பயிற்சி பெற்று கடந்த தையில் இந்தியா திரும்பியதாகவும் தெரிவித்துள்ளார். சார்ல்ஸ் சென்னை லோயலா கல்லூரி முன்னை நாள் மாணவர் ஆவர். இவர் தற்போது இந்திய விசேட உளவுப் பிரிவினரால் விசாரிக்கப்பட்டு வருகிறார். இவருடன் ஜெயகர், ரமேஸ் என்பவர்களும் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். ஜெயகர் தானும் யாழ்ப்பாணத்தில் பயிற்சி பெற்றதாக பெலிசாரிடம் கூறியுள்ளார்.


## விளம்பரங்கள் கோரப்படுகின்றன

நான்காம் பக்க ஈழ பூமி விளம்பரப் பகுதியில் பிரசுரிப்பதற்கு வாசகர்களிடம் இருந்து, தேவை, விற்பனைக்கு, மணமகன் தேவை, மணமகள் தேவை போன்ற விளம்பரங்கள் கோரப்படுகின்றன.

இக்கூப்பனுடன் அனுப்பப்படும் விளம்பரங்களுக்கு விசேட கட்டணம் அறவிடப்படும்.


# இலங்கை வாலிபர் இந்தியாவில் கைது

(இந்தியா ஆக். 28)

போலி கடவுச் சீட்டு தாயாரிப்பதில் ஈடுபட்டவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் செல்வராஜ் நிர்மலன் என்பவர் உட்பட ஒன்பது பேர் டெல்லி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். இவரிடம் இருந்து 80 போலி விசா முத்திரைகள் 18 போலி கடவுச் சீட்டுக்கள், 75 ஆயிரம் ரூபா (இந்தியக் காசு), 2,000 ஸ்ரேலிங் பவுண்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இவரும் இவரது மனைவியும் ஜேர்மன் பாஸ்போட்டிலே இந்தியா வந்துள்ளதாகவும் இவர்கள் தலைக்கு 30,000 இந்திய ரூபாய்கள் வாங்கி கனடா, லண்டன் போன்ற நாடுகளுக்கு ஆட்களை அனுப்புகின்றார்கள் எனவும் கூறப்படுகிறது.

இவர் தற்போது சீ.பி.ஐ இனால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

# வடமராட்சியைவிட்டு மக்கள் பெருமளவில் வெளியேற்றம்

(யாழ் நிருபர்)

இராணுவத்தின் உத்தரவைத் தொடர்ந்து வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, மற்றும் வடமராட்சி பகுதிகளை விட்டு மக்கள் பெருமளவில் வெளியேறி உள்ளனர். அண்மையில் இராணுவம் துண்டுப்பிரசுரம் மூலம் மக்களை வீடுகளை விட்டு வெளியேறி கோயில்களில் தஞ்சம் புகுமாறு உத்தரவிட்டதை தொடர்ந்தே மக்கள் பெருமளவில் யாழ்ப்பாணத்தை நோக்கி நகர்ந்துள்ளனர். இன்னும் சில தினங்களில ' ஒப்பரேசன் லிபரேசன்' பாணியில் மீண்டும் ஒரு தாக்குதல் நடைபெறலாம் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்த போதும் கடந்த சில நாட்களாக விமான, பீரங்கி குண்டுத் தாக்குதல்கள் குறைந்துள்ளது. இருப்பினும் இடையிடை கடலில் இருந்து பீரங்கி குண்டுகள் வடமராட்சியை நோக்கி ஏவப்பட்ட வண்ணம் இருக்கிறது.

## செய்திச் சுருக்கம்



### இந்திராவின் நினைவு தினம்

இந்தியாவின் முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் ஏழாவது நினைவு தினம் எதிர்வரும் 31ஆம் திகதி இந்தியாவில் நடைபெற உள்ளது. இவர் 1984 நவம்பர் 31ம் திகதி சீக்கியதீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

# யாழ். போதனா வைத்தியசாலை தாக்கப்படமாட்டாது

யாழ் போதனா வைத்தியசாலையைச் சுற்றியுள்ள பிரதேசம் பாதுகாப்பு வலயமாக தாம் பிரகடனப்படுத்தி உள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது. இப் பிரதேசத்தை தரையில் இருந்தும் வானில் இருந்தும் இலகுவில் அடையாளம் கணும் வகையில் செஞ்சிலுவை சங்க அடையாளங்கள் பொறிக்கப்பட்டுள்ளது. மேலும் இப் பிரதேசத்தில் கீழ் வரும் நடவடிக்கைகள் எதுவும் தம்மால் மேற்கொள்ளப் படமாட்டாது என விடுதலைப் புலிகளும், இலங்கை இராணுவமும் உறுதி அளித்துள்ளன.

* இப் பிரதேசத்தை இராணுவத் தளமாகப் பாவிப்பது,
* அயுத பாணிகளாக தங்குவது,
* இராணுவத் தளபாடங்களை சேகரித்து வைப்பது,
* இப் பிரதேச கட்டடங்களில் இருந்து இராணுவ ஆயுதங்களை பாவிப்பது
* இப் பிரதேசத்தை நோக்கி இராணுவ ஆயுதங்களை பாவிப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# யாழ். வளாக விடுதிக்கு மீண்டும் ஒளி

(யாழ் நிருபர்)

யாழ் பல்கலைக்கழக வளாக விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு இரவில் படிப்பதற்கு வசதியாக ஜெனரேற்றர் மூலம் ஒளி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இவர்களுக்கு சில விரிவுரையாளர்கள் இலவசமாக உதவுவதற்கு முன்வந்துள்ளார்கள். யாழ்ப்பாணத்திற்கு கடந்த பல மாதங்களாக மின்சாரம் தடைப்பட்டுள்ளது யாவரும் அறிந்ததே.

# புதிய எதிர்க்கட்சி கூட்டு

(அரசியல் நிருபர் சண்முகரட்ணம்)

தமிழர் விடுதலைக் கூட்டனி, E.N.D.L.F, ரெலோ, ஈரோஸ் ஆகிய மூன்று கட்சிகளும் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைமையில் புதிய எதிர் கட்சிக் கூட்டாக இயங்க உள்ளது. இவர்கள் முன்பு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையின் கீழ் கூட்டாக இயங்கினர்.

அண்மையில் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் திரு. அஸ்ரப் பத்திரிகையாளரிடம் தெரிவிக்கையில் பாராளு மன்றத்தில் நடைபெற்ற நம்பிக்கையில்லா பிரேரணை விவாதத்தில் தனக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நேரம் ஒதுக்கத் தவறியமையே இப் புதிய கூட்டுக்கு காரணம் என்று கூறினார். மேலும் முன் கூட்டணியுடன் இருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ் தாம் சுதந்திரக் கட்சியுடன் தொடர்ந்து இயங்கப் போவதாக கூறியுள்ளார்கள்.


**Global Printers**

164A, (Rear) Mitcham Road, Tooting, London SW17 9NJ. Tel: 081-767 8895

We Undertake the following work at reasonable rates:

PRINTING - SINGLE AND MULTI COLOUR
TAMIL & ENGLISH

Letter Heads, Business Cards, Compliment Slips, Invoices. Wedding Cards, Invitation Cards. Leaflets, Posters, Tickets.

Global Printers

*For prompt service at reasonable rates call us on 081-767 8895*

OPEN SEVEN DAYS A WEEK
FROM 10.00a.m. to 5.00p.m.